கணக்கிடப்பட்டு ஒதுக்கி இருப்பதாக் சொல்கிறார்கள். நான் அரசாங்கத்தைக் கேட்பது; இதையாவது போட்டால் அந்த ஹெட்டிலேயிருந்து நேராக இராணிப்பேட்டைக்கு வருகின்ற அந்தக் குழாய்கள் புதிய குழாய்களாக அமைப்பதன் மூலம் தண்ணீர் ஜரூராக வரும் என்று சொல்கிறார்கள். எனவே, அந்தப் பராமரிப்புச் செலவையாவது உடனடியாகச் செய்து இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படவில்லை; பராமரிப்புச் செலவு இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இப்பொழுது நகராட்சியின் பரிசீலனையில் இருக்கிறது. நகராட்சியிடமிருந்து பதில் வந்த பிறகு, அரசு பரிசீலனை செய்த பிறகு திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டால் இராணிப்பேட்டையைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர்ப் பஞ்சம் என்ற பிரச்னை இருக்காது.

## 7. அரசினர் சட்டமுன்வடிவு

### குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே: 1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு அ. ரகுமான்கான்: I oppose the introduction of thi Bill.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுகுறித்து ஏதாவது கருத்துக்கள் சொல்வதானால் சொல்லட்டும். இல்லையென்றால் நான் இதை அப்போல் செய்து பேசி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இப்பொழுது இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜ்தான்.

(முற்பகல் 10·20)

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, இந்தக் குறைந்த பட்சக் கூலி நிர்ணய மசோதாவை அறிமுகம் செய்ய அமைச்சர் அனுமதி கேட்டுள்ளார். இந்தச் சட்டத்தினுடைய 5-வது பிரிவும், 7-வது பிரிவும் அரசாங்கம், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிப்பதற்காக கமிட்டிகள் போடவேண்டுமென்பதை அடிப்படையாக வைத்திருக்கிறது. 9-வது பிரிவின்கீழ் குழுக்கள் இருக்கின்றன. அந்தக் குழுவிலே இருக்கிற உறுப்பினர் பதவிகள் காலியாகிற காரணத்தாலோ, அல்லது அதிலே சில டிஃபக்டுகள்

டெக்னிக்கலாக வருகிற காரணத்தாலோ, அந்தக் குழுவினுடைய அதிகாரம் செல்லுபடியாகாது, செயல் திறனற்றது என்று சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதில் செக்ஷன் 5—ன்படியும், —ன்படியும் 9-ன்படியும், குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்க அரசு போடுகிற கமிட்டி வெறும் அட்வைசரி கமிட்டி தான். அதனுடைய பரிந்துரைகள் ஒன்றும் பைண்டிங் அல்ல. அதிலே உள்ள டெக்னிக்கல் டிஃபக்ட் காரணமாக அது செயல்படாது என்பதல்ல முக்கியம். இன்றைக்கு முக்கியமான பிரச்னை, ஏற்கனவே நிர்ணயித்திருக்கிற குறைந்தபட்சக் கூலி அமுல் நடத்தப்படவில்லையென்பது தான். பால் வள நிறுவனத்திலே குறைந்தபட்சக் கூலி அமுல் நடத்தப்படுகிறதா என்றால் இல்லை. எனவே, காலம் கடத்தத்தான் இப்படி குழு போடுவது வழி வகை செய்யும். அதற்காக வந்துள்ள சட்ட முன்வடிவு என்பதால், I oppose the introduction of the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி;

''1981ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு பேரவை முன் அறிமுகம் செய்யப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. வரவு செலவுத் திட்டம் 1981—82

வாக்கெடுப்பு —தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண்.6 பத்திரப் பதிவு

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 6 6 பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ.3,25,50,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவோணத்திலிருக்கும் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகத்தில் பணி புரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: